| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>தர்மராஜ், த/பெ நடராஜன் | அ.வ.எண்.65/2020 | 10.08.2026 |

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

1. அ.வ.எண்.427/2018 வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பணையின் பேரில் நிறைவேற்று மனு நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரம் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் நிறைவேற்று மனுவை தாக்கல் செய்தால் 2,3 பிரதிவாதிகளுக்கு பாதகம் ஏற்படும் என்பதால் நான் இன்று வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.
2. சர்வே எண்.285/5 சி ல் 0.42.0 ஏர்ஸில் தென்புறம் தென்வடல் 3 அடி அகலம் கொண்ட 0.02 சென்ட் நிலத்தை பொருத்து மட்டும் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 சென்டை வாய்க்காலாக பயன்படுத்தி கொள்வதற்காக வாதி வாங்கினார் என்றால் நான் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர் தான் வாதி கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டார். மேற்படி நான் செய்துகொண்ட கிரைய ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
3. வாதி தன்னுடைய விவசாயத்திற்காக மேற்படி 2 சென்ட் நிலத்தை வாய்க்காலாக விவசாயம் செய்ய வேண்டி வசதி உரிமையாக பயன்படுத்தி வருவதை நான் தடுக்க இயலாது

என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Signed,
தர்மராஜ்

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார் |

PRAGATHEESHWARAN SUBRAMANIAN
Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.